www.padippakam.com

பிரான்ஸ், கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் அச்சாகிறது. விசேட இலவச பதிப்பு

ஈழநாடு பாரிஸ்

தற்காலிக முகவரி
70, RUE LOUIS BLANC,
75010 PARIS.
TEL: 42 05 88 67
FAX: 42 05 83 04

14 தை 1994

EELANADU

# ஈழநாடு அலுவலகம் விஷமிகளால் தீக்கிரை!

**"ஈழநாடு" தலைமை அலுவலகம் கடந்த புதன்கிழமை நள்ளிரவு இனந்தெரியாத விஷமிகளினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.**

**காட்டுமிராண்டித்தனமான இச்சம்பவத்தினால் "ஈழநாடு" நிறுவனத்துக்குச் சுமார் 2 லட்சம் பிராங் இழப்பு ஏற்பட்டுள்ளது.**

ஆசிரியரின் இல்லத்துக்கு நள்ளிரவு சுமார் 12.30 மணியளவில் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அநாமதேய பேர்வழி —
"ஈழநாடு" அலுவலகத்தைக் கொளுத்திவிட்டோம்; இனியும் உனது போக்கை மாற்றாவிட்டால் அடுத்தது நீதான்" எனத் தெரிவித்தார்.
இதனை அடுத்து ஆசிரியரும் நிர்வாகியும் அலுவலகத்துக்கு விரைந்தபோது அலுவலகம் தீப்பற்றி எரிந்திருந்தது.
பொலிசாரும் தீயணைப்புப் படையினரும் ஸ்தலத்துக்கு விரைந்து தீயை அணைத்திருந்தனர். பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த இரசாயனப் பகுப்பாய்வாளர்களும் உடனடியாக சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

## திரளான வாசகர்கள் விரைந்தனர்

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற அநேக வாசகர்கள் மறு நாள் வியாழக்கிழமை காலை மு[illegible] எமது அலுவலகத்துக்கு வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.
உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் வாசகர்கள், அனுதாபிகள் எம்முடன் தொடர்பு கொண்டு தமது அனுதாபத்தைத் தெரிவித்து வருகின்றனர்.
இச்சம்பவத்தைக் கண்டித்து பாரிஸில் பல்வேறு வர்த்தக ஸ்தாபனங்களும், பொது நிறுவனங்களும் கண்டனப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளன.



எரிந்த நிலையில் அலுவலகம்

## "பின்னணியில் வலிய கரம்" -திலகர்

(பாரிஸ்)
"புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் ஈழ மக்களுக்கும் அவர்களது வெளிப்பாட்டு சாதனங்களுக்கும் தமிழ் ஈழ எதிரிகளால் எம்மிடையே உள்ள புல்லுருவிகளின் ஊடாக தொடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலே "ஈழநாடு" மீது எரியூட்டப்பட்ட சம்பவமாகும்."
தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர். திரு. லோறன்ஸ் திலகர் "ஈழநாடு" தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்
"புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் தேசியத்

(அடுத்த பக்கம் பார்க்க)

## மீண்டும் ஈழநாடு சாம்பல் மேட்டிலிருந்து..

"அக்கிரமம்தான் - அதற்காக அதிர்ந்து விடாதீர்கள்!".
"ஈழநாடு தொடர்ந்து வரவேண்டும்".
"உங்கள் பணி தொடர நாம் என்ன உதவியும் செய்ய தயாராக உள்ளோம்".
தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருந்த தொலைபேசியூடாக எமக்கு கிடைத்த ஆறுதல் வார்த்தைகள் இவை.
தீயினால், உங்கள் "ஈழநாடு" அலுவலகத்துக்குள் இருந்த பொருட்களை மட்டும் தான் இரையாட முடியுமே தவிர எமது மனஉறுதியை அல்ல.

**"ஏசுவார்கள், எரிப்பார்கள்
அஞ்சவேண்டாம்;
உண்மையை எழுதுங்கள்;
உண்மையாய் எழுதுங்கள்".**

யோகர் சுவாமிகளின் இந்த ஆசியுடன் இயங்கியது யாழ்ப்பாணத்து "ஈழநாடு". அந்தப் பண்ணையில் பயின்று, நடைபவனிவரும் எமக்கு அந்தச் சித்தரின் வசனங்கள் தான் உரம்.
யாழ்ப்பாணம் "ஈழநாடு" அலுவலகத்தை எண்பத்தியோராம் ஆண்டு மே முப்பத்தியோராம் திகதி தீயிட்டவர்கள் சிங்களப் பேரினவாதிகள். தமிழ்மக்களின் தேசியக் குரலாய், தமிழ்த்தேசியவாதத்தை "ஈழநாடு" வளர்த்து வந்தது. அதனால் ஆத்திரமடைந்த சிங்களப் பேரினவாதிகள் சிங்களக் காடையர்கள் மூலம் "ஈழநாடு" அலுவலகத்தை அப்போது தீக்கிரையாக்கினர்.
ஆனால் உங்கள் "ஈழநாடு"வின் பாரிஸ் தலைமை அலுவலகத்துக்கு தீ வைத்தவர்கள், புலம்பெயர்ந்த தமிழர்களின் தேசியக் குரலையே அழிக்க முயற்சித்துள்ளது தான் வேதனை தருகிறது.
யாழ்ப்பாணம் "ஈழநாடு" அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டு சாம்பல் மேடாக அந்த அலுவலகம் இருந்தபோது, அந்த சாம்பல் மேட்டிலிருந்து பத்திரிகையை வெளியிட்ட அனுபவம் எமக்குண்டு.
தமிழ்ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து இன்று உலகெங்கும் வாழும் தமிழ்மக்களின் தேசியக் குரலாய்-அவர்களின் பண்பாட்டு, நாகரீக மாற்றங்களை பிரதிபலிக்கும் சாதனமாய் திகழ்ந்துவரும் உங்கள் "ஈழநாடு" இப்போது சாம்பல் மேட்டிலிருந்து மீண்டும் பிறக்கிறது. எத்தனை இடர்தான் வந்தாலும் அது தன் இலட்சியப் பயணத்தை தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

படிப்பகம்